தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி பிரிவின் கீழ் களுத்துறை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, காலி, மாத்தறை, மொனராகலை, பதுளை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்கள் பிரதானமாக செயற்படுவதுடன் அந்த மாவட்டங்களை 07 வலயங்களாக உள்ளடக்கி பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பின் கீழ் செயற்படுத்தப்படுகின்றது.

பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு மூலம் ஒவ்வொரு மாவட்டத்தையும் மேற்பார்வை செய்யும் பிரதேச காரியாலயங்கள்


மாவட்டம்	பிராந்திய அலுவலகம்
களுத்துறை	காலி பிராந்திய அலுவலகம்
காலி	
மாத்தறை	
மாத்தளை	கண்டி பிராந்திய அலுவலகம்
கண்டி	
பதுளை	பதுளை பிராந்திய அலுவலகம்
இரத்தினபுரி	இரத்தினபுரி பிராந்திய அலுவலகம் (கொழும்பு மாவட்டத்திலுள்ள தோட்டங்களும் இதனூடாக கண்காணிக்கப்படுகின்றது)
கேகாலை	கேகாலை பிராந்திய அலுவலகம்
நுவரெலியா	நுவரெலியா பிராந்திய அலுவலகம்
	ஹட்டன் பிராந்திய அலுவலகம்

(ஆதாரம்: பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பு-2023)

தோட்ட சனத்தொகை பற்றிய விபரங்கள் - பிரதேச மட்டத்தில்

விபரம்	பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பு							மொத்தம்
	காலி	இரத்தினபுரி	பதுளை	கேகாலை	கண்டி	ஹட்டன்	நுவரெலியா	
மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை	16,260	29,728	49,405	15,668	34,367	57,085	58,916	261,429
மொத்த சனத்தொகை	60,555	112,725	185,262	56,468	129,477	218,455	230,079	993,021

(ஆதாரம்: பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பு-2023)



(ஆதாரம்: பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பு-2023)

மேற்படி வரைபடத்தின் படி இலங்கையில் பெருந்தோட்ட மக்களின் பெரும்பான்மையானோர் நுவரெலியா மாவட்டத்தில் வாழ்கின்றனர் என்பது தெளிவாகின்றது. ஹட்டன் மற்றும் பதுளை ஆகிய நகரங்கள் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களை பெற்றுள்ளன. கேகாலை மாவட்டம் இலங்கையில் பெருந்தோட்ட மக்கள் தொகையில் மிகக் குறைந்த சதவீதத்தை காண்பிக்கின்றது.

1.2 நிறுவனத்தின் செயற்பணி, தூரநோக்கு, குறிக்கோள்கள்

தூரநோக்கு

''மலையக மக்களை வலுவூட்டுவதன் மூலம் இலங்கையின் முன்னேற்றத்தில் பங்குகொள்ளச் செய்தல்''

இடைத் தொடர்புகளுடனான முரண்பாடுகள் நீக்கப்பட்ட ஒற்றுமையான இலங்கை சமூகமே எமது தூர நோக்காகும். துரித பேண்தகு அபிவிருத்தியில் சம வாய்ப்புக்களை ஏற்படுத்துவதனூடாக தோட்டப்பகுதி மக்களின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்தல், சுய இருப்பு மற்றும் சௌபாக்கியத்தை உறுதிசெய்தல் எமது நோக்கமாகும். எதிர் கால நோக்குகளை மாற்றியமைப்பதனூடாக மற்றும் எமது கூட்டு மனிதநேயத்தை ஏற்று நாம் இலங்கையர்களினதும் வாழ்க்கையை வளமாக்கி கற்ற, ஆரோக்கியமான மற்றும் முற்போக்கான சமூகமொன்றைக் கட்டியெழுப்புவோம்.

செயற்பணி

''சமூக – பொருளாதார சமத்துவத்தை அடைந்து கொள்ளல் : சௌபாக்கியம்மிக்க மலையக மக்களை போஷித்தல்''

சௌபாக்கியம்மிக்க மலையக பரம்பரை மக்களை போஷித்தல், அவர்களுடைய கலாச்சார மற்றும் இனத் தனித்துவத்தைப் பாதுகாத்தவாறு அவர்களுக்கு முன்னேற்றுவதற்கான வாய்ப்பை வழங்குதலே எமது செயற்பணியாகும். அவர்களுடைய தனித்தன்மைக்கு பாதிப்பு ஏற்படாத பிரகாரம் தேசிய பாரம்பரியத்திற்கு அவர்களுடைய ஒருங்கிணைப்பை உறுதிப்படுத்தியவாறு சம வாய்ப்பு, உரிமைகள் மற்றும் வாய்ப்புக்களை வழங்குவதற்கு நாம் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றோம். பேண்தகு அபிவிருத்தியின் ஊடாக வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்தல், சமூக – பொருளாதார முன்னேற்றத்தை துரிதப்படுத்துதல் மற்றும் இலங்கை சமூகத்திற்கு தன்னிறைவு மற்றும் பெருமிதம்மிக்க பங்காளர்களாகுவதற்கு சமூக அங்கத்தவர்களை வலுவூட்டல் எமது நோக்கமாகும். கொள்கைகள் மற்றும் ஆரம்பிப்புக்கள் ஊடாக நாம் அபிமானத்தை வளர்க்கின்றோம். பன்முகத்தன்மையை கொண்டாடுகின்றோம் மற்றும் அனைவருக்கும் சமூக – பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்துவோம்.


1.3 பிரதான பணிகள்

தற்போதைய அரசாங்கத்தின் கீழ், நீர் வழங்கல் மற்றும் உடல் ஆரோக்கியம் ஆகிய விடயங்களுக்கான அமைச்சாக நீர் வழங்கல் அமைச்சு திகழ்ந்ததுடன், பெருந்தோட்ட சமூகத்தின் வாழ்விடங்கள், உட்கட்டமைப்பு வசதிகள், வாழ்வாதாரம், சமூக மற்றும் கலாச்சார ஆகிய துறைகளின் அபிவிருத்தியை துரிதப்படுத்தும் கடமையை நோக்காக கொண்டு 2315/35 ஆம் இலக்க 19.01.2023 ஆந் திகதி அதிவிசேட வர்த்தமானிப் பத்திரத்தின் ஊடாக நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு %தாபிக்கப்பட்டுள்ளது. அதன் படி, நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள கடமைகளில் பின்வரும் பிரதான பணிகளை நிறைவேற்றும் பொறுப்பு தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

- அரசாங்க மற்றும் தனியார் பெருந்தோட்டக் கம்பனிகளில் பணியாற்றும் காணியற்ற மக்களுக்காக வீடுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் புதிய கிராமங்கள் மற்றும் நகரங்களை நிர்மாணித்தல்.
- தோட்டப் பிரிவு மக்களை பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார ரீதியில் வலுவூட்டுவதற்கான அடிப்படை வசதிகள், வாழ்வாதார வழிகள் மற்றும் சமூக அபிவிருத்தித் திட்டங்கள் உள்ளிட்ட ஏனைய தேவைப்பாடுகளை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- கிராமிய தோட்டப் பிரிவுகளின் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.
- தோட்டப் பகுதி மக்கள் தலைமைத்துவம் மற்றும் மக்கள் பங்கேற்பிற்கு முன்னுரிமை அளிக்கப்படும் ''சன மூல மையங்கள்'' அமைத்தல்.
- தோட்டப்புற மக்களின் பிள்ளைகளுக்கு ஆரம்பக் கல்வி மற்றும் சுகாதார வசதிகளை உறுதிப்படுத்துவதற்கான விசேட வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்.

- பெருந்தோட்ட வலயங்களுக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபை, பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பு மற்றும் சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம் ஆகிய நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய அனைத்து விடயங்களுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் மற்றும் நிறுவனங்களை மேற்பார்வை செய்தல்.

1.4 தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி பிரிவின் நிறுவன கட்டமைப்பு (2023.12.31 திகதியில்)




1.4.1 2023.12.31 ஆம் திகதியில் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி பிரிவின் அங்கீகரித்த மற்றும் உண்மையான பதவியணி

தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி பிரிவின் அங்கீகரித்த மற்றும் உண்மையான பதவியணி

தொ இல	பதவி	சேவை	தரம் / வகுப்பு	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி		உள்ளபடி பதவியணி		வெற்றிடம்
				நிரந்தரம்	ஒப்பந்தம்/ தாமை	நிரந்தரம்	ஒப்பந்தம் / தாமை	
1.	மேலதிக செயலாளர்	இ.நி.சேவை	விசேட தரம்	2	0	2	0	0
2.	பணிப்பாளர் நாயகம்(திட்டமிடல்)	இ.தி.சேவை	விசேட தரம்	1	0	1	0	0
3.	பணிப்பாளர் நாயகம்(பொறியியல்)	இ.பொ.சேவை	விசேட தரம்	1	0	1	0	0
4.	சிரேஸ்ட உதவி செயலாளர்	இ.நி.சேவை	வகுப்பு I	1	0	1	0	0
5.	பணிப்பாளர் (அபிவிருத்தி)	இ.நி.சேவை	வகுப்பு I	1	0	0	0	1
6.	பணிப்பாளர் (திட்டமிடல்)	இ.தி.சேவை	வகுப்பு I	1	0	0	0	1
7.	பணிப்பாளர் (பொறியியல்)	இ.பொ.சேவை	வகுப்பு I	1	0	0	0	1
8.	பிரதான கணக்காளர்	இ.க.சேவை	வகுப்பு I	1	0	1	0	0
9.	ෙජ්ෂ්ඨ ලේඛනාධිකාරී	இ.க.சேவை	வகுப்பு I	1	0	1	0	0
10.	உதவிச் செயலாளர்	இ.நி.சேவை	வகுப்பு II/III	1	0	0	0	1
11.	உதவி / பிரதிப்பணிப்பாளர்	இ.நி.சேவை	வகுப்பு II/III	2	0	2	0	0
12.	உதவி / பிரதிப்பணிப்பாளர்	இ.தி.சேவை	வகுப்பு II/III	2	0	2	0	0
13.	உதவிப் பணிப்பாளர்(பொறியியல்)	இ.பொ.சேவை	வகுப்பு II/III	2	0	1	0	1
14.	கணக்காளர்	இ.க.சேவை	வகுப்பு II/III	2	0	1	0	1
15.	உள்ளக கணக்காய்வாளர்	இ.க.சேவை	வகுப்பு II/III	1	0	0	0	1
16.	உதவிப் பணிப்பாளர்	இ.தி.சேவை (அதி விசேட)	வகுப்பு I/III	1	0	1	0	0
17.	நிர்வாக உத்தியோகத்தர்	அ.மு.உ. சேவை	அதியுயர் தரம்	1	0	0	0	1
18.	மொழி பெயர்ப்பாளர்	மொழிபெயர்ப்பாளர் சேவை	வகுப்பு I / II	2	0	0	0	2
19.	தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்	இ.தொ.மற்றும் தொ.	2- வகுப்பு I/II/III	1	0	1	0	0
20.	அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்	இ.தொ.சேவை	வகுப்பு I/II/III	65	0	60	0	5

21.	தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்	இ.தொ.சேவை	வகுப்பு I/II/III	4	0	0	2	2
22.	முகாமைத்துவ உத்தியோகத்தர்கள்	திணைக்களம்	வகுப்பு I/II/III	11	0	9	0	2
23.	பெருந்தோட்ட சமூக தொடர்பாடல் வசதியளிப்பாளர்	அமைச்சு		212	0	211	0	1
24.	தகவல்,தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர்	இ.தொ.சேவை	3- III/II/I	1	0	0	0	1
25.	சாரதிகள்	இணைந்த சாரதி சேவை	I/II/III விசேட	10	0	10	0	0
26.	அலுவலக உதவியாளர்	அலுவலக உதவியாளர் சேவை	I/II/III விசேட	13	0	12	0	1
மொத்தம்				**341**	**0**	**317**	**2**	**22**

1.5 தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி பிரிவு



தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி பிரிவிற்கு உள்ளடங்கும் பிரிவுகள்

1.5.1 நிர்வாகப் பிரிவு

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி பிரிவின் நிர்வாகப் பிரிவில் கீழ் இயங்கும் அனைத்து நிறுவனங்களினதும் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக,

- மனித வளங்களை முறையாக நிர்வகிப்பதுடன் அனைத்து துறைகளின் பொறுப்புக்களையும் கவனத்தில் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கைக்குள் பணியாளர்களை பகிர்ந்தளித்தல்.
- அமைச்சினால் முன்னெடுக்கப்படும் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு தொடர்புபட்ட நிறுவனங்களுக்கு ஆதரவை வழங்குதல்.
- ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வெளியிடப்படும் சுற்றறிக்கையின் பிரகாரம் மற்றும் அமைச்சின் முடிவுகள் தொடர்பாக அமைச்சின் அனைத்து பிரிவுகளுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
- அலுவலக உபகரணங்களை பயன்படுத்தல் தொடர்பாக வளங்களின் அதிகபட்ச பலன்களை பெறுவதற்கு பிரிவுகளை இயக்குவித்தல்.
- அலுவலக தேவைகளுக்கு போக்குவரத்து வசதிகளை பயன்படுத்துதல்.
- அலுவலகத்திற்கு கிடைக்கப்பெறும் அலுவலக கடிதங்களை உடனடியாக பகிர்ந்தளித்தல்.
- அலுவலக கட்டிடங்கள் மற்றும் ஏனைய பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- அலுவலக பொறுப்புகளுக்கு ஏற்ப பயிற்சி நிகழ்ச்சிகளை திட்டமிடல்.

1.5.2 அபிவிருத்திப் பிரிவு

பெருந்தோட்ட மக்களின் நலன்கள் வதிவிடங்கள், வாழ்க்கைத்தரம் சமூக பொருளாதார வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி பிரிவின் கீழ் இயங்கும் நிறுவனங்கள், மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் மற்றும் உள்ளூராட்சி சபைகளுடாக இச்செயற்றிட்டங்களை நடைமுறைபடுத்தல் மற்றும் ஒருங்கிணைப்பு தொடர்பான அனைத்து பொறுப்புக்களையும் ஏற்று நடாத்துவதுடன் அரசின் ஒன்றிணைந்த நிதியுடன் இந்திய அரசின் நிதி உதவிகளையும் கொண்டு தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி பிரிவின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைவதற்கான வழிவகைகளை மேற்கொள்வது அபிவிருத்திப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது.

பின்வரும் செயற்பாடுகளுடன் மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளை உரிய முறையில் செயற்படுத்துவதற்காக பொறியியல் பிரிவு மற்றும் திட்டமிடல் பிரிவு என்பன அபிவிருத்திப் பிரிவிற்கு உதவுகின்றது.

1.5.2.1 உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செயற்றிட்டத்தை செயற்படுத்துதல்.

- வரிசை (லயன்) வீடுகளில் பழுதடைந்த கூரைகளைத் திருத்தி மீள் தகரமிடல்.
- சுகாதார மற்றும் பாதுகாப்பான குடிநீர் வசதிகளை பெற்றுக் கொடுத்தல் மற்றும் அவற்றை மேம்படுத்தல்.
- சுகாதார வசதிகளை மேம்படுத்தும் செயற்றிட்டங்கள்.
- சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை மேம்படுத்தல் மற்றும் தாபித்தல்.
- தோட்ட மற்றும் தோட்ட வைத்தியசாலைகளின் பாதைகளை அபிவிருத்தி செய்தல். (பாதைகள், நடைபாதைகள், படிக்கட்டுகள். பாலங்கள் போன்றன).

பொது வசதிகள் அபிவிருத்தி

ஏனைய சமூக/ கலாச்சார நிலையங்கள்

விளையாட்டு மைதானங்கள்
ஆரம்ப பாடசாலைகளை மேம்படுத்தல்

வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

1.5.2.2 தோட்ட வீடமைப்பு திட்டங்களின் கீழ் பின்வரும் செயற்றிட்டங்களை செயற்படுத்தல்.

- புதிய வதிவிட வீட்டுத்திட்டத்தின் கீழ் வீடமைப்பு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- இந்திய நிதி உதவி மூலம் நிர்மாணிக்கப்படும் வீடமைப்புத் திட்டங்களை ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வை செய்தல்.
- புதிய வதிவிட வேலைத்திட்டம், இந்திய நிதி உதவி மூலம் நிர்மாணிக்கப்படும் வீடமைப்புத் திட்டங்களுக்கு நீர் வசதி, மின்சார வசதி மற்றும் பாதைகள் வழங்கும் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- பெருந்தோட்ட வீடமைப்பு திட்டங்கள் மூலம் அமைக்கப்படும் வீடுகளுக்கு உறுதிப் பத்திரங்களை வழங்குதல்.
- புதிய வதிவிட வேலைத்திட்டத்தின் வீடுகளுக்குரிய தவணைப்பணம் சேகரித்தல்.

1.5.2.3 சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் கீழ் இயங்கும் ஹட்டனில் அமைந்துள்ள தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையம், ரம்பொடையில் அமைந்துள்ள தொண்டமான் கலாச்சார நிலையம், நோர்வூட்டில் அமைந்துள்ள தொண்டமான் விளையாட்டரங்குத் தொகுதி மற்றும் பிரஜா சக்தி (E kiosk) அபிவிருத்தி சபை மேற்பார்வை செய்தல்.

1.5.2.4 வெளிநாட்டு நிதி உதவியின் கீழ் இயங்கும் தொண்டமான் ஞாபகார்த்த தொழிற் பயிற்சி நிலையத்தை அபிவிருத்தி செய்தல்.

1.5.2.5 அபிவிருத்தி திட்டங்களை அங்கீகரித்தல், நடைமுறைப்படுத்தல், முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவுகளை பரிந்துரைத்தல்.

1.5.2.6 கட்டுமானப் பணி மற்றும் வேறு அபிவிருத்தி தொடர்பான முன்னேற்ற அறிக்கை மற்றும் திட்டமிடல் அறிக்கை சமர்ப்பித்தல்.

1.5.3 திட்டமிடல் பிரிவு

தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி பிரிவின் இலக்குகளை அடைவதற்காக பிரதானமாக பின்வரும் நடவடிக்கைகள் திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது.

- பெருந்தோட்ட மக்களின் நலன் கருதி கொள்கைகள், வேலைத்திட்டங்களை இனங்கண்டு அதற்கேற்ப தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி பிரிவின் செயற்றிட்டங்களை திட்டமிடல்.
- அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக வருடாந்தம் தேவையான நிதியேற்பாடுகளை வருடாந்த வரவு செலவுத்திட்டத்திலிருந்து ஒதுக்கிக் கொள்வதற்கு திட்டமிடல்.
- முன்னேற்ற அறிக்கை சமர்ப்பித்தல் மற்றும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை ஏற்பாடு செய்தல்.
- தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி பிரிவின் அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துவதற்கான மூலதன மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.
- புதிய அபிவிருத்தித் திட்டங்களை இனங்காணல் மற்றும் செயற்றிட்டங்களை திட்டமிடல்.
- கள பரீட்சிப்பு, மதிப்பீடு மற்றும் கள விஜயங்களை மேற்கொள்ளல்.
- உத்தேச செயற்றிட்ட முன்மொழிவுகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் அவற்றில் பொருத்தமான செயற்றிட்டங்களை இனங்காணல், சாத்திய வள ஆய்வு, செயற்றிட்டங்களை செயற்படுத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல், கள மதிப்பாய்வு, முன்னேற்ற மீளாய்வு, நிதி முன்னேற்றம் மற்றும் பௌதீக முன்னேற்றம் உள்ளடங்களாக முன்னேற்ற அறிக்கையை தயார் செய்தல் மற்றும் உரிய நிறுவனத்திற்கு ஆற்றுப்படுத்தல்.
- கிராமியப் பிரதேசங்களில் வாழ்வாதார மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கு விசேட செயற்றிட்டங்களை அமுல்படுத்தல், உரிய நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு மற்றும் வசதிகளை வழங்குதல்.

- தோட்ட சமூகத்தின் அடிப்படை தேவைகள் பற்றிய தகவல்களை இற்றைப்படுத்தி நடாத்திச் செல்லல்.
- பெருந்தோட்ட சமூக தொடர்பாடல் வசதிகளை வழங்குகின்ற அலுவலர்கள் மற்றும் சமூக சக்தி அலுவலர்களின் இயலளவு அபிவிருத்தி தொடர்பாக பயிற்சி மற்றும் அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
- தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி பிரிவின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைத் தயார் செய்து பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.
- தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி பிரிவின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக அமைச்சரவை விஞ்ஞாபனத்தை தயார் செய்தல்.
- வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தை (உதா: வீதி வரைபடம்) தயாரித்தல்.
- நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்றிட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தல்.
- தேசிய மட்டத்தில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக அமைச்சு சார்பாக பிரதிநிதித்துவம் செய்தல்.

1.5.4 கணக்கு பிரிவு

- தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி பிரிவு மற்றும் அதன் கீழ் இயங்கும் நிறுவனங்களுக்கு தேவையான பொருட்களையும் சேவைகளையும் பெறுகைச் செயற்பாட்டினூடாக வழங்குதல், சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகளை வழங்குதல், அபிவிருத்தி செயற்பாடுகளுடன் தொடர்புடைய கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல், பேணல், அரசாங்க நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் அனைத்து கொடுப்பனவுகளுக்கும் பொறுப்பாக இருப்பது கணக்குப் பிரிவாகும்.
- தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி பிரிவின் செயற்பரப்பிற்குள் அமைந்த பிரிவுகள் மற்றும் நிறுவனங்களில் நிதி முகாமைத்துவம்.
- கொள்வனவு ஏற்பாட்டு திட்டத்தைத் தயார் செய்தல் மற்றும் முகாமை செய்தல்.
- சொத்து முகாமைத்துவம்.
- நிதி முகாமைத்துவம் தொடர்பான புதிய தொழில் நுட்பங்களை உபயோகித்தல்.
- நிதி முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள்.
- கணக்காய்வு தொடர்பான செயற்பாடுகளை ஒருங்கிணைப்பு செய்தல்.

1.5.5 உள்ளக கணக்காய்வுப் பிரிவு

- அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் (பெருந்தோட்ட வலயங்களுக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபை மற்றும் சௌமிய மூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம்) உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை பரிசீலனை செய்து அவற்றின் தரத்தை மதிப்பிடுதல்.
- அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதில் பயன்படுத்தப்படும் கட்டுப்பாடுகளை மதிப்பீடு செய்தல் மற்றும் மதிப்பாய்வு செய்தல்.
- அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் சொத்துக்கள் எந்தளவிற்கு சேதங்களிலிருந்து பாதுகாப்பாக உள்ளன என்பதை ஆராய்தல்.
- அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் கருத்து முறைமைகளை செயற்படுத்துவதில் மற்றும் திட்டமிடல்களை அடைவதில் ஏற்பட்ட முன்னேற்றத்தை தீர்மானித்தல் மற்றும் அறிக்கையிடல்.
- தவறுகள் மற்றும் மோசடிகளை தடுக்கவும் கண்டறியவும் பயன்படுத்தப்படும் உள்ளக கட்டுப்பாடுகளின் சுயாதீன மதிப்பீட்டை நடாத்தல்.
- அரச நிதிஒழுங்கு முறைகள், ஸ்தாபன விதி கோவை, பொது நிர்வாக சுற்றறிக்கைகள், நிதி அமைச்சு மற்றும் ஏனைய அமைச்சகங்கள் ∴ திணைக்களங்களால் பிரசுரிக்கப்பட்ட அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படுகின்றதா என்பதை கண்டறிதல்.
- அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் அனைத்து சொத்துக்களும் சிக்கனமாகவும் முறையாகவும் பயன்படுத்தப்படுகின்றதா என்பதை கண்டறிதல்.
- கணக்காய்வு மற்றும் நிர்வாக கூட்டங்களை ஏற்பாடு செய்தல் மற்றும் நடாத்தல்.
- அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் செயல்திறனை அதிகரிக்க ஆலோசனைகள் மற்றும் யோசனைகளை முன்வைத்தல்.
- அலுவலர்களின் செயல்திறனின் தரத்தை மதிப்பிடுதல்.

- திறைசேரியின் கணக்காய்வு திணைக்களத்தால் கோரப்பட்ட தகவல்கள் மற்றும் அறிக்கைகளை வழங்கள்.
- செயலாளர் அல்லது மேலதிக செயலாளரால் பரிந்துரைக்கும் சிறப்பு விசாரணைகளை நடாத்தல்.

1.5.6 பொறியியல் பிரிவு

- வருடாந்த நிகழ்ச்சித்திட்டத்தை ஒழுங்கமைப்பதற்காக முன்னுரிமையை சுட்டிகாட்டி, அதற்காக திட்டமிடல் பிரிவிற்கு ஒத்துழைப்பு அளித்தல்.
- செயற்பாட்டு நிறுவனத்தின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற மதிப்பீடுகளை சரிபார்த்து பரிந்துரைத்தல்
- கட்டுமானப் பணிகளை திடீர் ஆய்வு மற்றும் மேற்பார்வை செய்தல்.
- கட்டுமானப் பணிகளின் முன்னேற்றம் மற்றும் தரக்கட்டுப்பாட்டிற்கு பங்களித்தல்.
- கட்டண பற்றுச்சீட்டை (இடைநிலை மற்றும் இறுதி) தொழிநுட்ப அதிகாரிகளின் பரிந்துரையின் பேரில் நிறைவேற்றப்பட்ட பணிகளை உறுதிப்படுத்தல்.
- தக்கவைப்பு பணத்தை செலுத்துதல் தொடர்பாக பரிந்துரைத்தல்.
- தேவைக்கேற்ப கொள்முதல் நடவடிக்கைகளுக்கு பங்களிப்பு வழங்குதல்.
- அமைச்சு கட்டிடத்தை பராமரிப்பதற்கான பரிந்துரை வழங்குதல்.
- தொழிநுட்ப அதிகாரிகளின் மேற்பார்வை.
- பெருந்தோட்ட தொடர்பாடல் வசதியளிப்பாளர்களின் ஊடாக (PCCF) கட்டுமான தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ளல்.
- கட்டுமானப்பணிகளுக்கான தரவு அமைப்பை பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல்.

1.6 தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி பிரிவின் கீழ் இயங்கும் நிறுவனங்கள்

1.6.1 சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம்

இலங்கையின் சகல சமூகங்களுக்கும் இடையில் சமாதானம், சகவாழ்வு, புரிந்துணர்வு மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்தல், இனங்களுக்கிடையில் ஒற்றுமை மற்றும் சமூக ஒருங்கிணைப்பு மேம்படுத்தல் மற்றும் உற்சாகப்படுத்தல், இலங்கையர்கள் மத, கல்வி, தொழில்சார், சமூக, அரசியல், பொருளாதார, அழகியல்சார் மற்றும் பௌதீக அபிவிருத்தியை மேம்படுத்தல், இலங்கையர்களின் பொருளாதார, அரசியல், கல்வி, கலாச்சார, சமூக மற்றும் அழகியல் துறைகளில் அறிவு மற்றும் புரிந்துணர்வை கட்டியெழுப்புதல் போன்ற விடயங்களின் ஊடாக சிறந்த சமூகமொன்றை உருவாக்குவதற்காக "சௌமியமூர்த்தி ஞாபகார்த்த மன்றம்" 2005 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் ஊடாக அவ்வருடத்தில் தாபிக்கப்பட்டது. இந்த மன்றத்தின் கீழ் 04 நிறுவனங்கள் செயற்படுகின்றன. இந்த நிறுவனங்கள் 04 இன் செயற்பாட்டு பணிகள் மற்றும் உத்தியோகத்தர்களின் வேதனம் உள்ளடங்கலாக தோட்ட வீடமைப்பு பிரிவின் மூலம் ரூபா 139.1 மில்லியன் 2023.12.31 ஆந் திகதியன்று நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் அதில் ரூபா 129 மில்லியன் 2023.12.31 ஆந் திகதியாகும் போது செலவிடப்பட்டுள்ளது.

1.6.1.1 ஹட்டனில் அமைந்த தொண்டமான் தொழில் பயிற்சி நிலையம்

இந்த தொழிற்பயிற்சி நிலையத்தில் வருடத்திற்கு 400 மாணவர்களை பயிற்றுவிப்பதற்கான வசதிகள் உள்ளதுடன் பயிற்சியாளர்களுக்கான தங்குமிட வசதிகள் மற்றும் உணவும் (சுமார் 200 பயிற்சியாளர்களுக்கு) அரசாங்கத்தினால் வழங்கப்படுகிறது. தற்போது 04 வருடாந்த பாடநெறிகள் மற்றும் 13 அரையாண்டு பாடநெறிகள் உட்பட 17 தொழில் பாடநெறிகள் தற்போது பயிற்றுவிக்கப்படுகின்றது அதன்படி இந்த தொழிற் பயிற்சி நிலையம் அனைத்து வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுடன் (NVQ) தரமான 17 பாடநெறிகளில் வருடத்திற்கு 500 தேர்ச்சிச் சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன் அவர்களால் 60% சுய தொழில்கள் ஆரம்பித்திருப்பதும், 40 % தேர்ச்சி பெற்று தொழிற் சந்தையில் பிரவேசித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.



தொண்டமான் தொழில் பயிற்சி நிலையம், ஹட்டன்

செயற்படுத்தப்படும் பயிற்சி நெறிகள்

- மோட்டார் வாகனத் தொழிற்துறை
- மின்சாரத் தொழிற்துறை
- ICTT
- மின் உபகரணப் பராமரிப்புத் தொழிற்துறை (தொலைக்காட்சி, வானொலிப்பெட்டி திருத்தம்)
- மின் உபகரணப் பராமரிப்புத் தொழிற்துறை
- (வீட்டு மின்சாரம்)
- உருக்கியொட்டல் தொழிற்துறை (Welder)
- அலுமினிய பெப்ரிக்கேடர் (fabricator)
- தையல் தொழிற்துறை
- ஹோட்டல் பாடநெறி (அறைச் சேவை, பொறுப்பாளர்)
- மரவேலை தொழிற்துறை (Carpenters)
- இயந்திர உபகரண தொழிற்துறை (Mechanic)
- மருந்தக பாடநெறி (Pharmacy)
- ஆரம்பப்பள்ளி ஆசிரிய பாடநெறி
- தொலைக்காட்சி கலை/ சிகை அலங்காரம்
- முச்சக்கர வண்டி திருத்த பாடநெறி
- தாதி உதவிப் பாடநெறி

2016-2023 வரை பயிற்சி பெற்ற மாணவர்களின் விபரம் பின்வருமாறு

இல	வருடம்	பயிற்சி நெறிகளின் எண்ணிக்கை	பயிற்சி அளிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை	பயிற்சி பெற்ற பிரிவுகளின் எண்ணிக்கை (Batches)
1	2016	12	263	2
2	2017	12	335	2
3	2018	12	228	2
4	2019	12	276	2
5	2020	12	211	1
6	2021	17	287	2
7	2022	17	248	2
	2023	14	202	2
மொத்தம்			**1848**	

1.6.1.2 ரம்பொடையில் அமைந்துள்ள தொண்டமான் கலாச்சார நிலையம்

குறைந்த வசதிகளைக் கொண்ட பெருந்தோட்ட சமுதாயத்தினரின் கலாச்சார மற்றும் கலைத்திறன்களை வளர்க்கும் நோக்கத்துடன் இந்த நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. எதிர்காலத்தில் இங்கு கற்றல்களை முறைசார் மற்றும் முறைசாரா விதமாக வேறாக்கியுள்ளதுடன் முறைசார் பயிற்சியின் கீழ் தேசிய கல்வி நிறுவனத்துடன் (NIE) இணைந்து அதன் பாடத்திட்டத்திற்கு ஏற்ப முழு நேர பாடநெறிகளை நடாத்துவதற்கும் அரையாண்டு பயிற்சி பாடநெறிகளை நடாத்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. முறைசாரா பயிற்சியின் கீழ் வயது வேறுபாடின்றி எவருக்கும் தமது ஆர்வத்தின் படி மரபு ரீதியான கலைத் திறன்களை வெளிக்கொணர்வதற்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்படும். இதன் ஊடாக நாளாந்தம் அழுத்தம் நிறைந்த தொழில்களில் ஈடுபடுகின்ற பெருந்தோட்ட சமூகத்தின் மனவழுத்தத்தை குறைத்துக் கொள்வதற்கும் அவர்களுக்கு அழகியற்கலை பெறுமானங்களை மேம்படுத்திக் கொள்வதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கும். இதற்கு மேலதிகமாக பலதரப்பட்ட விழாக்கள் மற்றும் கலாச்சார நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவது தொடர்பாக மண்டப வசதிகளை வழங்குவதும் ரம்பொடையில் அமைந்துள்ள தொண்டமான் கலாச்சார நிலையத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.



ரம்பொடையில் அமைந்துள்ள தொண்டமான் கலாச்சார நிலையம

2021 ஆம் ஆண்டில் இந்நிலையம் கொவிட்-19 நோயாளிகளுக்கான இடைநிலை மையமாக மாற்றப்பட்டது. எனவே 2020 ஆம் ஆண்டிற்கு பிறகு எந்தவித பயிற்சி நெறிகளோ வகுப்புக்களோ நடாத்தப்படவில்லை. இது தொடர்பான முன் மொழிவுகளை சௌமியமூர்த்தி தொண்டமான் மன்றத்தினால் 2023 ஆம் ஆண்டில் இருந்து மீண்டும் சமர்ப்பிக்க தொடங்கியது.

1.6.1.3 நோர்வூட்டில் அமைந்துள்ள தொண்டமான் விளையாட்டு அரங்குத் தொகுதி

விளையாட்டின் ஊடாக பயன் பெறுகின்ற இளைஞர் யுவதிகளின் பௌதீக அபிவிருத்தி மட்டுமல்லாது உள அபிவிருத்தி மற்றும் பொழுதுபோக்கு நிலைமைகளை மேம்படுத்தும் நோக்கில் இந்த விளையாட்டுத் தொகுதி பேணப்பட்டு வருவதுடன் அதற்கு மேலதிகமாக அருகிலுள்ள பாடசாலைகள் மற்றும் அரச நிறுவனங்கள் பலவற்றுக்கு பலதரப்பட்ட விளையாட்டு போட்டிகள் மற்றும் செயற்பாடுகளை நடாத்துவதற்கு அங்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அதேபோன்று அதன் பகுதியொன்றில் நோர்வூட் தமிழ் பாடசாலையின் ஆரம்ப பிரிவு வகுப்புக்களை நடாத்திச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

விளையாட்டு கட்டிடத்தொகுதியில் பிரதானமாக உடல்வலிமை நிலையமொன்றும் இருப்பதுடன் டெனிஸ், பெட்மின்டன், வலைப்பந்து, கரப்பந்து, கைப்பந்து, கூடைப்பந்து ஆகிய விளையாட்டுக்களுக்கு உள்ளக விளையாட்டு அரங்கொன்றும் கிரிக்கெட் போன்ற விளையாட்டுக்களுக்கு வெளியக விளையாட்டு மைதானமும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. தற்பொழுது உதைப்பந்து சம்மேளனத்திற்கு வழங்கப்படுவதன் மூலம் தொண்டமான் விளையாட்டு கட்டிடத்தொகுதியை புதிய விதத்தில் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்ககூடியதாக இருக்கும். அதன் பிரகாரம் சர்வதேச தரத்திற்கு பொருந்தும் வகையில் விளையாட்டு கட்டிடத்தொகுதியை அபிவிருத்தி செய்யும் நோக்கில் மூன்று கட்டங்களின் கீழ் விளையாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



ல் அமைந்துள்ள தொண்டமான் விளையாட்டு அரங்குத் தொகுதி

உடல் வலிமை மற்றும் பொழுதுபோக்கினை மேம்படுத்தும் விளையாட்டுக்கள்

இதன் கீழ் உடல்வலிமை பயிற்சியாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டு அவர்கள் சகல சமூக வலு நிலையங்களுக்கும் இணைப்புச் செய்யப்பட்டு தோட்ட பிரதேசத்தை அண்டிய இளைஞர் யுவதிகள் உடல்வலிமை பயிற்சிகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேபோன்று உள்ளக விளையாட்டுக்கள் தொடர்பாக இளைஞர் யுவதிகளை ஈடுபடுத்துவதற்கும் மேம்படுத்துதற்கும் இதன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.

போட்டிகளை நோக்காக கொண்ட விளையாட்டுக்கள்

விளையாட்டுக்களில் திறமைகளை வெளிப்படுத்தும் விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு தேவையான அனைத்து வசதிகள் மற்றும் வழிநடத்தல்களை மேற்கோண்டு தேசிய மட்ட வெற்றிகளை ஈட்டுவதற்கு அவர்களை வழிநடத்துவது இதன் நோக்கமாகும்.

பொருளாதார நோக்கம் கொண்ட விளையாட்டுக்கள்

நுவரெலியா மாவட்டம் பல வெளி நாட்டவர்களின் மனதை கொள்ளை கொள்ளும் பிரதேசமாக இருப்பதுடன் இதுவரை நுவரெலியா மாவட்டத்தில் சர்வதேச மட்டத்தில் விளையாட்டு மைதானத் தொகுதியொன்று இல்லாமையினால் தொண்டமான் விளையாட்டரங்கு கட்டிடத்தொகுதியை சகல வசதிகளும் கொண்ட சர்வதேச தரத்திலான விளையாட்டு மைதான தொகுதியாக உருவாக்கி அதன் ஊடாக வருமானத்தை ஈட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

2023 ஆம் ஆண்டில் ஆற்றிய பணிகளை கருத்திற்கொண்டு பின்வரும் தகவல்களை முன்வைக்கலாம்.

ஐனவரி முதல் ஒக்டோபர் வரை ரம்பொடையில் அமைந்துள்ள தொண்டமான் கலாச்சார நிலையத்தின் மூலம் பின்வரும் வகையில் மாணவர்கள் பயிற்சிகளைப் பெற்றனர்.

இல	விளையாட்டு	2023ஆண்டில் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை
01	உடற்பயிற்சி நிலையம்	60
02	கரப்பந்து	70
03	கால்பந்து	516
04	கிரிக்கெட் (HardBall)	141
05	கிரிக்கெட் (SoftBall)	96
06	வலைப்பந்து	59
	மொத்தம்	**942**

மேலே குறிப்பிட்டுள்ள விளையாட்டுக்களை தவிர, கலாச்சார அம்சங்கள் மற்றும் முறையான சுற்றுலாக்கள் (formal visits) இந்நிலையத்தின் மூலம் நடாத்தப்படுகின்றன. மேலும்,

- புத்தாண்டு கொண்டாட்டம் பாரம்பரிய முறையில் பால் காய்ச்சி, மத மற்றும் மதச்சடங்குகளுக்கு அமைவாக தேநீர் உபசரிப்புடன் விளையாட்டு வளாகத்தில் நடைபெற்றது.
- வருடாந்த கிரிக்கெட் விழா நடைபெற்றதுடன் இவ்விழாவிற்கு நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் அமைச்சர் ஜீவன் தொண்டமான் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.
- நோர்வூட் பிரதேசத்தை சுற்றி போட்டிகள் மற்றும் சுழற்சி முறையிலான போட்டிகள் நடாத்தப்படவுள்ளது. 2023.07.23 ஆம் திகதி முதலாம் கட்ட கூட்டம் நடைபெற்றது.
- சுழற்சி முறையிலான கால் பந்து போட்டிகளை நடாத்தல்.
- அனைத்து அலுவலர்களின் பங்களிப்புடன் மைதான வளாகத்தில் ‘‘சிரமதான’’நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.



நோர்வூட் விளையாட்டு மைதானத்தில் கட்டப்பட்ட கிரிக்கெட் பயிற்சி வலை

1.6.1.4 பிரஜா சக்தி அபிவிருத்திச் செயற்றிட்டம் (E- KIOSK Centers)

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை முழுமையாக பயன்படுத்தி குறைந்த வரப்பிரசாதங்களைக் கொண்ட இனக் குழுக்களுக்கு முழுமையானதும் விளக்கமானதுமான சமூக பொருளாதார அபிவிருத்தியை உரிமையாக்கிக் கொடுத்தல் இந்த செயற்றிட்டத்தின் நோக்கமாகும். அது தொடர்பாக சமூகத்திற்கு தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பத்தை வழங்கும் நோக்கில் பெருந்தோட்டப் பிரதேசங்கள் உள்ளடங்கும் வகையில் 2006 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பிரஜா சக்தி அபிவிருத்தி செயற்றிட்டம் நுவரெலியா, பதுளை, கண்டி, கேகாலை, இரத்தினபுரி, மாத்தளை, கழுத்துறை, காலி, மாத்தறை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள 44 பிரஜா சக்தி நிலையங்கள் (E- KIOSK Centers) ஊடாக அமுல்படுத்தப்படும்.

தோட்ட பிரதேசங்களில் முதலாம் ஆண்டு முதல் உயர் கல்வியைத் தொடர்கின்ற மாணவ மாணவிகளுக்கும் பாடசாலையை விட்டு விலகிய இளைஞர் யுவதிகளுக்கும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை வழங்கும் கேந்திர நிலையமாக பிரஜா சக்தி நிலையம் செயற்படும். அதேபோன்று கல்வி நோக்கங்கள் தொடர்பாக இணையத்தள வசதிகள் தேவையானோர் தொடர்பாக இலவசமாக அந்த வசதிகளை வழங்குவதற்கும் நூல்நிலைய வசதிகளை வழங்குவதன் ஊடாக அவர்களுடைய வாசிப்பு மற்றும் அறிவு வளர்ச்சிக்கும் கவிதை, நாடகம் மற்றும் பேச்சு போட்டிகளின் ஊடாக ஆளுமை விருத்திக்கும் இந்த நிலையத்தின் ஊடாக வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அதேபோன்று பலதரப்பட்ட செயலமர்வுகள் மற்றும் விரிவுரைகளை நடாத்துவதும் பலதரப்பட்ட கலாச்சார நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதும் இதன் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

அதேபோன்று சுகாதாரம் மற்றும் பெண்களை வலுப்படுத்தல், சூழல் பிரச்சினைகள், சுய தொழில்கள், தோட்டத்துறையின் பிள்ளைகள் தொடர்பாக தாக்கம் செலுத்துகின்ற பலதரப்பட்ட பிரச்சினைகள், ஊக்கப்படுத்தல் செயற்பாடுகள், போதைவஸ்து நிவாரண நிகழ்ச்சித்திட்டங்கள், ஊட்ட சத்து நிலையை மேம்படுத்தல் (சமூக சமையலறை திட்டம்), கொரோனா கட்டுப்பாட்டு செயற்றிட்டங்கள் மற்றும் சாகுபடி திட்டங்கள் போன்ற பலதரப்பட்ட தலைப்புக்களின் ஊடாக தோட்டச் சமூகத்தை அறிவுறுத்துவதற்காக பிரஜா சக்தி அபிவிருத்தி செயற்றிட்டத்தின் ஊடாக பலதரப்பட்ட சமூக அடிப்படை செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதுடன் விசேடமாக அவர்களுடைய வருமானம், உழைப்பு, வருமான வழிகளை அதிகரித்தல் (சுயதொழில்) தொடர்பாகவும் தலைமைத்துவ திறன்கள் மற்றும் பௌதீக அபிவிருத்தி தொடர்பாகவும் ஊக்கப்படுத்தல் செயற்பாடுகள் இதன் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

தோட்டங்களுக்கு தகவல் தொடர்பாடல் மற்றும் தொழிநுட்ப வசதிகளை அளிப்பதோடு மிகையான வாழ்வாதாரத்தை ஏற்படுத்துவதற்கு தகவல் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த தொழில்களை

பெற்றுக்கொள்வதற்கு இளைஞர் யுவதிகளை ஊக்குவிப்பதை நோக்கமாக கொண்டு ''பிரஜா சக்தி அபிவிருத்தி செயற்றிட்டம்'' 2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

அதேபோன்று கல்வி நோக்கங்களுக்காக இணையத்தள வசதிகள் தேவையானவர்களுக்கு இலவசமாக வழங்குதல் இதன் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. பிரஜா சக்தி நிலையங்களின் ஊடாக தகவல் தொழில் நுட்பம் தொடர்பாக பின்வரும் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

1. **தகவல் தொழில்நுட்பத்தின் அறிமுகம்**
2. **வன்பொருள் தொடர்பான பயிற்சி**
3. **றுனைழறள மென்பொருள் தொடர்பான பயிற்சி**
4. **ீயவைவெஇ ஆஅைஉசழளழகவ றழசனஇ ஆசைழளழகவ நுஒஉநடஇ ஆஅைஉசழ ளழகவ ீழறநச ீழவைவெஇ ஆஅைஉசழளழகவ யுஉஉநளள மென்பொருள் தொடர்பான பயிற்சி**
5. **இணையம் மற்றும் மின்னஞ்சல் தொடர்பான பயிற்சி**
6. **புசயிாஅஉ னுநளபைெ- புழசநட னுசயறஇ ீாழவழளாழிஇ ர்வுஆடுஇீயபந ஆயமநச தொடர்பான பயிற்சி**
7. **ளுஉயஎைபெ தொடர்பான பயிற்சி**
8. **அச்சிடுதல் (சவைவெபைெ) தொடர்பான பயிற்சி**

2023 ஆம் ஆண்டில் பிரஜா சக்தி நிலையங்களின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் பின்வருமாறு

இல	திட்டத்தின் பெயர்	திட்டங்களின் எண்ணிக்கை	பங்கு பற்றியவர்களின் எண்ணிக்கை
01	மாணவர்களின் வருகை (கணனி மற்றும் பாடசாலை ஊடாக)	44 நிலையங்கள்	16417
02	மாணவர்களின் வருகை	44 நிலையங்கள்	761
03	உடல் கட்டுமான பயிற்சிகள்	44 நிலையங்கள்	547
04	தையல்	44 நிலையங்கள்	521
05	அடிப்படை கல்வித்திட்டங்கள்	83	4043
06	கொண்டாட்டங்கள்	60	1912
07	வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்	106	2287
08	சுகாதாரத்திட்டங்கள்	80	5065
09	சமூக மற்றும் சமூகம் அடிப்படையிலான திட்டம்	210	13226
10	சமூகம் அடிப்படையிலான திட்டம்	40	6721
மொத்தம்			**51500**

1.6.2 பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பு

பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பு (PHDT), 1992 செப்தெம்பர் மாதம் 18 ஆம் திகதி 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ், பதிவு செய்யப்பட்ட கம்பனியொன்றாக ''தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி நிதியம் (PHSWT) தாபிக்கப்பட்டது. இவ்வமைப்பு 2002 ஒக்டோபர் 10 ஆந் திகதி PHDT என பெயரிடப்பட்டது. PHDT என்பது இலங்கை அரசாங்கம் (GOSL), பிராந்திய தோட்ட நிறுவனங்கள் (PCs) மற்றும் பெருந்தோட்ட தொழிற்சங்கங்கள் (TU) ஆகியவற்றை உள்ளடக்கிய முத்தரப்பு அமைப்பாகும். இது இலங்கை அரசால் நிறுவப்பட்ட RPC மூலம் நிர்வகிக்கப்படும் தோட்டங்களில் சுமார் ஒரு மில்லியன் தோட்ட சமூகத்தின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்காகவும் தேவையான அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் அமைக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் நாயகத்தின் தலைமைத்துவத்தின் கீழ் பணிப்பாளர், திணைக்கள தலைவர்கள், முகாமைத்துவம் பத்தரமுல்லை தலைமை காரியாலயத்துடன் இணைக்கப்பட்டுள்ள அலுவலக ஊழியர்களுடனான இலங்கை அரசு (புழுளுடு)இ பிராந்திய தோட்ட நிறுவனங்கள் (சீஊள) மற்றும் பெருந்தோட்ட தொழிற்சங்கங்களின் (வுருள) அங்கத்தவர்களினாலான பணிப்பாளர் சபையின் கீழ் ீர்னுவு இயங்குகின்றது. ீர்னுவு மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளை செயற்படுத்துவதற்காக ஒவ்வொரு அலுவலகத்திலும் பிராந்திய பணிப்பாளர்கள்,முகாமைத்துவம் மற்றும் அலுவலக சபையுடன் தோட்டங்களில் அமைந்துள்ள 07 பிராந்திய அலுவலகங்களினால் தலைமை அலுவலகம் பலப்படுத்தப்பட்டுள்ளது.

ீர்னுவு யின் மூலம் அரசாங்க அமைச்சுக்கள்,தொழிற்சங்கங்கள்,பிராந்திய தோட்ட நிறுவனங்கள்இ ஐபுழுஇ பேழு மற்றும் அரசாங்க.்.தனியார் துறை நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் பெருந்தோட்ட வீடுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள்,நீர் மற்றும் உடல் ஆரோக்கியம்,சுகாதாரம் மற்றும் போசணை, குழந்தை பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி, தோட்ட தொழிலாளர் வீட்டு கூட்டுறவு சங்கங்கள், பயிற்சி அபிவிருத்தி மற்றும் விளையாட்டு நல சங்கங்கள் ஆகிய பிரதான செயற்பாடுகளுடன் பல உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி செயற்றிட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளது.

தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி பிரிவின் ஏற்பாடுகள் மூலம் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பினால் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகளின் முன்னேற்றம் கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

2023.12.31 திகதியன்று புதிய வீடமைப்பு திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் -சுவர் மட்டத்திலிருந்து கூரை மட்டம் வரை

பிராந்தியம்	**2017 (அங்கீகரிக்கப்பட்டவை)**	**2018 (அங்கீகரிக்கப்பட்டவை)**	**2020 (அங்கீகரிக்கப்பட்டவை)**	**2021 (அங்கீகரிக்கப்பட்டவை)**
காலி	-	-	-	-
இரத்தினபுரி	-	-	-	-
பதுளை	-	-	-	-
கேகாலை	-	-	-	15
கண்டி	7	-	-	13
ஹட்டன்	18	10	30	46
நுவரெலியா	7	-	-	30
மொத்தம்	**32**	**10**	**30**	**104**

2023.12.31 ஆந் திகதி வரையான வீடமைப்பு திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் - எதிர் காலத்தில் பூர்த்தி செய்ய உத்தேசித்துள்ள வீடுகள்

பிராந்தியம்	**2017 (அங்கீகரிக்கப்பட்டவை)**	**2018 (அங்கீகரிக்கப்பட்டவை)**	**2020 (அங்கீகரிக்கப்பட்டவை)**
காலி	-	-	-
இரத்தினபுரி	-	-	-
பதுளை	-	-	-
கேகாலை	-	-	-
கண்டி	-	53	-
ஹட்டன்	12	52	-
நுவரெலியா	-	45	4
மொத்தம்	**12**	**150**	**4**

2023.12.31 திகதியன்று புதிய வீடமைப்பு திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் -சுவர் மட்டத்திலிருந்து பூர்த்தி செய்யப்பட்ட வீடுகள்

பிராந்திய	2017 (அங்கீகரிக்கப்பட்டவை)	2018 (அங்கீகரிக்கப்பட்டவை)	2020 (அங்கீகரிக்கப்பட்டவை)	2021 (அங்கீகரிக்கப்பட்டவை)
காலி	-	-	-	-
இரத்தினபுரி	-	15	-	-
பதுளை	-	-	-	-
கேகாலை	-	-	-	-
கண்டி	-	-	-	-
ஹட்டன்	-	-	31	-
நுவரெலியா	-	-	24	64
மொத்தம்	**-**	**15**	**55**	**64**

2023.12.31 ஆந் திகதி வரையான உட்கட்டமைப்பு வசதிகள் செயற்றிட்டங்களின் முன்னேற்றம்

ஆண்டு	செயற்றிட்டம்	செயற்றிட்டங்களின் எண்ணிக்கை	பூரணப்படுத்தப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கை	2024 ஆம் ஆண்டிற்கு கொண்டுசெல்லப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கை
2023	தோட்ட மக்களுக்கு மத மற்றும் கலாச்சார வசதிகள் வழங்குவதை உறுதிப்படுத்தல்	8	7	1
	தொழிலற்ற தோட்ட மக்களுக்கு சுய தொழில் வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல்	1	1	-
	அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட தோட்ட மக்களுக்கு நிவாரண வசதிகளை வழங்குதல்	11	11	-
	விசேட தேவைகள் பூர்த்தியடையாத செயற்றிட்டங்கள் (2020 மற்றும் 2021 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டவை)	2023 வருடத்திற்கு முன்பு பூரணப்படுத்தப்பட்டது. பற்று சீட்டு மற்றும் செலுத்தப்பட்டுள்ளது		
	தோட்டங்களை அண்டிய முன் குழந்தை வசதிகள் அபிவிருத்தி பெண்கள் வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தல் மற்றும் CDC (குழந்தை நல அபிவிருத்தி நிலையங்கள்) திறத்தல்	1	-	1
	மொத்தம்	**21**	**19**	**2**

1.6.3 பெருந்தோட்டப் பிராந்தியத்திற்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை

பெருந்தோட்ட சமூகத்தின் வாழ்வாதார நிலைமையை முன்னேற்றல் மற்றும் உயர்த்தும் நோக்கில் 2018 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் மூலம் பெருந்தோட்ட பிராந்தியத்திற்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபை (NEVIDA) தாபிக்கப்பட்டது. அதன் பிரகாரம், பெருந்தோட்ட சமூகத்தை சமூக நீரோட்டத்தில் இணைத்து நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்கும் சமூகத்தை வலுப்படுத்துவதற்கு தேவையான கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் நிறுவனத்துடன் இணைந்து அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் கல்வித்தரத்தை உயர்த்துவதற்கும் எளிதாக்குவதற்கும் மாற்று வாழ்வாதார வாய்ப்புக்களை ஆரம்பிப்பதற்கும் தோட்டத்தின் சுகாதார அமைப்பை மேம்படுத்துவதற்கும் வலுப்படுத்துவதற்கும் முயற்சிகளை ஒருங்கிணைப்பதற்கும் பெருந்தோட்ட சமூகத்தினரின் வீடு மற்றும் காணி பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இந்நிறுவனத்திற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

இந்த அதிகாரசபையின் முகாமை 12 நபர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட முகாமைத்துவ சபையினைக் கொண்டிருப்பதுடன் அதிமேதகு சனாதிபதி அவர்கள் இதன் தலைவரை நியமனம் செய்கின்றார். அதேபோன்று " பணிப்பாளர் நாயகம்" அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று அலுவலராவார். பதவியணி தொடர்பாக 14 பிரிவுகளின் கீழ் 28 பதவிகள் உள்ளன. தற்போதுள்ள நிலைமைகளின் கீழ் நிரந்தர அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்வது தாமதமானது மற்றும் நிறுவனத்தின் அனைத்து நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஒப்பந்த அடிப்படையில் செயல்படும் அலுவலர்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

பெருந்தோட்ட அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கத்தைத் தவிர வேறு நிதி உதவிக்கான மாற்று நடவடிக்கைகளை கண்டறிய NEVIDA நடவடிக்கை எடுத்ததுடன் தனியார் துறை மற்றும் ஐக்கிய நாடுகளின் முகவர் நிறுவனங்களுடனும் தொடர்புகொண்டது.

2023.12.31 ஆந் திகதி வரையான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபையினூடாக முன்னெடுக்கப்படும் திட்டங்கள் / செயற்பாடுகளின் இறுதி முன்னேற்றம்

இல	செயற்றிட்டம்	ஆரம்பிக்கப்பட்ட தினம்	மதிபபீட்டு செலவு (ரூ.மில்லியன்)	ஒதுக்கீட்டு செலவு (ரூ.மில்லியன்)	முன்னேற்றம்
01	வீட்டு உரிமையாளர்களுக்கு 514 உரிமைப்பத்திரங்களை வழங்குதல்	2023.01.01	3.75	1	வீட்டு உரிமையாளர்களுக்கு 101 உரிமைப்பத்திரங்களை வழங்குதல்
02	UNFPA மற்றும் Save the Children நிறுவனத்துடன் இணைந்து பெருந்தோட்ட சமூகத்தினருக்கு சுகாதார உபகரணங்களை வழங்குதல்(தோட்டத்திலுள்ள 15-45 வயதுடைய கர்ப்பிணி தாய்மார்களுக்கு)	2022.06.01	75	-	4945 சுகாதார உபகரணங்கள்/ மகப்பேற்று பொதிகளை வழங்குதல்
03	12 மாவட்டங்களிலுள்ள 449 (Type 03) தோட்ட மாணவர்களுக்கு அரிசி பொதிகளை வழங்கள்	2023.01.08	225 தாய்வான் நன்கொடை (இலங்கை அரசு -11)	225 தாய்வான் நன்கொடை (இலங்கை அரசு -11)	தோட்ட பாடசாலைகளின் ஒரு குடும்பத்திற்கு 30 kg (Type 03) அரிசி பொதிகள் 33,333 வழங்கியமை

04	தோட்ட வேலை அனுபவமுள்ள 1000 இளைஞர் யுவதிகளுக்கு தேசிய தொழிற்பயிற்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் NVQ 3 மற்றும் NVQ 4 சான்றிதழ்களை வழங்குதல்	2023.01.07		1.5	தேசிய தொழிற்பயிற்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் சான்றிதழ்களை பெற 95 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன
05	தோட்ட சமூகத்தின் கல்வி நடவடிக்கைகளுக்காக தோட்டங்களின் பிரஜா சக்தி நிலையங்களின் நூலகங்களுக்கு 1000 புத்தகங்களை வழங்குதல்	-	-	-	1000 புத்தகங்களை 10 நூலகங்களுக்கு வழங்குதல்
06	தோட்ட மக்களுக்கான காணி மற்றும் வீட்டுக் கொள்கைகளை உருவாக்குதல்	2023.01.08	-	-	காணியற்ற தோட்ட குடும்பங்களுக்கு 10 பேர்ச்சஸ் காணி உரிமையை வழங்குவதற்கான கொள்கைகளை முடிவெடுத்தல்

1.7. வெளிநாட்டு உதவியுடன் நிர்மாணிக்கப்படும் செயற்றிட்டங்களின் விபரம்

1.7.1 இந்திய நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்படும் வீடமைப்பு செயற்றிட்டம் / செயற்றிட்டங்கள்

இச்செயற்றிட்டங்கள் மூன்று கட்டங்களாக அமுல்படுத்தப்படுவதுடன் முதலாம் கட்டம் (Stage 01) மற்றும் இரண்டாம் கட்டத்தின் (Stage 02) கீழ் 4,000 வீட்டு அலகுகள் 2016.01.08 ஆந் திகதி அமைச்சரவை அனுமதியுடன் இலங்கையில் இந்திய உயர் ஸ்தானிகராலயத்துடன் 2016.04.01 ஆந் திகதி கையொப்பமிடப்பட்ட புரிதல் ஒப்பந்தத்தின் கீழ் இந்திய வீட்டுத்திட்டத்தின் முதலாம் மற்றும் இரண்டாம் கட்டம் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் நேரடி மேற்பார்வையின் கீழ் உயர் ஸ்தானிகராலயத்தினால் தெரிவு செய்யப்பட்ட நான்கு நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்றது. இங்கு மூன்றாம் (Stage 03) கட்டத்தின் கீழ் 10,000 வீட்டு அலகுகள் செயற்படுத்தப்படுகின்றது.

ஒரு வீட்டின் பெறுமதி ரூபா 1.00 மில்லியன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ள இச் செயற்றிட்டத்தில் முதலாம் கட்டம் மற்றும் இரண்டாம் கட்டத்திற்காக இந்திய அரசினால் ரூபா 2,800,000/= தொகையும் உரிய பெருந்தோட்டக் கம்பனியால் ரூபா 75,000 /= தொகையும், பயனாளியினால் ரூபா 20,000/= உடல் உழைப்பும் வழங்கப்படும். இந்த வீடமைப்பு செயற்றிட்டங்கள் தொடர்பாக தேவையான குடிநீர் வசதிகள், மின்சாரம், பிரவேச வீதிகள் உள்ளடங்கலாக ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக முதலாவது கட்டத்தில் வீடுகள் தொடர்பாக ஒரு வீட்டு அலகிற்கு ரூபா 120,000/= மற்றும் இதன் இரண்டாம் கட்டம் தொடர்பாக ரூபா 400,000/= ஆக இலங்கை அரசினால் நிதி ஏற்பாடு செய்யப்படுகின்றது.

இந்திய நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும் வீடமைப்பு செயற்றிட்டம்

அ) முதலாம் மற்றும் இரண்டாம் கட்டம் (Stage 1 & 11) – 4,000 வீடுகள்

(1) வீடுகளை நிர்மாணித்தல்

2023.12.31 ஆம் திகதியன்று மொத்த பௌதீக முன்னேற்றம்

முதலாம் மற்றும் இரண்டாம் கட்டம் (Stage 1 & 11) – 4,000 வீடுகள்

பயனாளிகளிடம் கையளிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை	3825
பயனாளிகளிடம் கையளிக்கப்படவுள்ள வீடுகளின் எண்ணிக்கை	175
உட்கட்டமைப்பு வசதிகளை மாத்திரம் நிறைவு செய்ய வேண்டியுள்ள வீடுகளின் எண்ணிக்கை	37
நிறைவு செய்யப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை	3846
வீடுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் நிறைவு செய்யப்படாத வீடுகளின் எண்ணிக்கை	138

2023.12.31 ஆம் திகதியாகும் போது வீடுகள் நிர்மாணித்தலின் நிதிசார் முன்னேற்றம் - 4092.36 மில்.ரூபா

(2) வீடுகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல்

2023.01.01 முதல் 2023.12.31 ஆம் திகதி வரை உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கலின் நிதிசார் முன்னேற்றம்

உட்கட்டமைப்பு வசதி	**செலவு (மில்.ரூ)**
நீர்	8.93
மின்சாரம்	0
பாதை	6.15
மொத்த செலவு	15.08

(ஆ) மூன்றாம் கட்டம் (Stage III) – 10,000 வீடுகள்

III வது கட்டத்தின் கீழ் இந்திய அரசினால் 10,000 புதிய வீடுகள் பெருந்தோட்ட சமூகத்திற்கு வழங்குவதற்கு அனுமதி கிடைத்துள்ளது. அதற்கான அமைச்சரவைத் தீர்மானம் 2018.08.16 ஆம் திகதி கிடைக்கப் பெற்றுள்ளதுடன் இலங்கையின் இந்திய தூதுவராலயத்துடன் 2018.08.12 ஆம் திகதி அதற்கு உரிய புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அதன் பிரகாரம், பதுளை, ஹட்டன், நுவரெலியா, கண்டி, கேகாலை, இரத்தினபுரி மற்றும் காலி ஆகிய ஏழு தோட்ட வலயங்களில் தோட்ட சமூகத்திற்கு மூன்று கட்டங்களுடன் 10,000 வீட்டு அலகுகளை தோட்ட ஊழியர்களின் தலைமையில் மற்றும் தோட்ட ஊழியர் கூட்டுறவு சங்கங்கள் ஊடாக நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

1.7.2. தொண்டமான் தொழில் பயிற்சி நிலையத்தை நவீனமயப்படுத்தும் செயற்றிட்டம்

இந்திய அரசினால் ஹட்டனில் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் தொடர்பாக புதிய மூன்று மாடிக் கட்டிடமொன்று நிர்மாணிப்பதற்கும் தற்பொழுது உள்ள கட்டிடங்களை நவீன மயப்படுத்தலும் சந்தைக் கேள்விக்கு பொருந்தும் விதத்தில் புதிய பயிற்சிப் பாடநெறிகளை ஏற்படுத்தல் மற்றும்

அதற்குத் தேவையான புதிய தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குவதையும் நோக்காகக் கொண்டு இந்த செயற்றிட்டம் தொடர்பாக நிதி உதவி வழங்கப்படுகின்றது.

அதற்கமைய வெளிநாட்டு நன்கொடை பெறும் செயற்றிட்டங்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு

செயற்றிட்டத்தின் பெயர்		**பங்களிப்பு முகவர்**	**செயற்றிட்டத்தின் திட்டமிடப்பட்ட மதிப்பீடு (ரூ.மில்லியன்)**	**செயற்றிட்டத்தின் கால வரையறை**
இந்திய நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும் 4,000 வீடமைப்பு செயற்றிட்டம	வீடு	இந்திய அரசு	16.8	2016தொடக்கம் 2024 வரை
		இலங்கை அரசு	24.77	
இந்திய நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும் 10 000, வீடமைப்பு செயற்றிட்டம	வீடு	இந்திய அரசு	-	2023 தொடக்கம் 2027 வரை
	உட்கட்டமைப்பு வசதிகள்	இலங்கை அரசு	27.95	
தொண்டமான் தொழில் பயிற்சி நிலையத்தை நவீனமயப்படுத்தல் செயற்றிட்டம்	-		8.45	2017 தொடக்கம்*

* ** 20 செப்தெம்பர் 2017 அன்று இந்திய உயர்ஸ்தானிகராலயத்திற்கும் இவ்வமைச்சிற்கும் இடையே கையொப்பமிடப்பட்ட புரிந்துணர்வு (MOU) ஒப்பந்தத்திற்கமைய, மேற்கண்ட பணியின் செல்லுபடியாகும் காலம் 03 ஆண்டுகளாகும் (20 செப்தெம்பர் 2020 இல் காலாவதியாகின்றது). இருப்பினும், நிதி அமைச்சகம் இந்நோக்கத்திற்காக வரவு செலவு ஒதுக்கீட்டை டிசம்பர் 2019 வரை மட்டுமே வழங்கியுள்ளது.ஒப்பந்தத்தின் படி கட்டுமானப்பணிகள் 2021 ஆம் ஆண்டின் இடைப்பகுதியில் நிறைவுபெறுவதற்கு இருந்த போதிலும் எதிர்பாராத சூழ்நிலை (கொவிட் -19 தொற்று நோய் நிலைமை,பொருளாதார மந்தநிலை) காரணமாக செயற்றிட்டம் நீடிக்கப்பட்டுள்ளது. அதன்படி, கட்டுமானப்பணிகள் மற்றும் செயற்றிட்டத்தின் வழங்கள் பிரிவிலுள்ள உபகரண விநியோகம் 2023.09.14 இல் நிறைவடைந்துள்ளதுடன் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள கேட்போர் கூடத்திற்கு தேவையான தளபாடங்கள் மற்றும் பிற பயன்பாட்டுக்கு தேவையான உபகரணங்கள் வழங்கள் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

1.8 தோட்ட வீடமைப்பு பிரிவின் அபிவிருத்திப் பிரவேசம் மற்றும் செயற்றிட்டங்களை அமுல்படுத்தும் முறைமை

1.8.1 அபிவிருத்திப் பிரவேசம்

பிரதேச மற்றும் இன குழுக்களுக்கிடையில் நிலவுகின்ற சமூக மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை குறைக்கும் அணுகுமுறைகளினூடாக அரசின் நிலையான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைவதற்கு தேவையான கொள்கைகளை உருவாக்கி அமுல்படுத்தும் நோக்கில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட இந்த தோட்ட வீடமைப்பு பிரிவு பெருந்தோட்ட பிரதேசத்தை மையமாகக் கொண்டு வாழ்கின்ற 250,000 குடும்பங்கள் (ஏறக்குறைய ஒரு மில்லியன் சனத்தொகையுள்ள) சமூகம் தொடர்பாக சமூக பங்குபற்றல் மற்றும் அரச தலையீட்டுடன் மக்கள் சபை மற்றும் சமூக அடிப்படை ஊடாக பெருந்தோட்ட சமூக தலைமைத்துவம் மற்றும் பங்குபற்றலை பங்களிப்புச் செய்து அவர்களுடைய வாழ்வாதார நிலைமையை கட்டியெழுப்புவதும் வதிவிடங்கள் மற்றும் காணி பற்றிய பிரச்சினைகள், அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை குறைவடைதல் பற்றிய பிரச்சினைகள், குறை வருமான நிலைமை சுகாதார மற்றும் போசாக்குப் பிரச்சினைகளை இழிவுபடுத்துவதற்காக சுழற்சி

அடிப்படையில் பங்களிப்புச் செய்து அவர்களுடைய கல்வி, சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி இலக்குகளை பூர்த்தி செய்து கொள்வதற்குத் தேவையான அரச தலையீடும் மேற்கொள்ளப்படுகின்றது.

அதன் ஊடாக முன்னுரிமை வழங்கப்பட்டுள்ள வீடமைப்பு, குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் உள்ளடங்கலாக அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் போசாக்கு, ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்தி மற்றும் ஆரம்பக் கல்வி, தொழிற்பயிற்சி மற்றும் திறன்கள், சமூக வலுவூட்டல் போன்ற துறைகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அமைச்சரவை அமைச்சு மற்றும் ஏனைய நிரல் அமைச்சுக்கள், மாகாண அமைச்சு உள்ளடங்கலாக சகல நிறுவனங்களின் முழுமையான பங்களிப்பைப் பெற்றுக் கொண்டு வசதிகள் நிறைந்த சௌபாக்கியமான பெருந்தோட்ட சமூகமொன்றை உருவாக்குவதற்காக நாம் முன்னோடியாக செயற்பட்டு வருகின்றோம்.


1.8.2 தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி பிரிவின் அபிவிருத்தி முன்னுரிமைகள்

- தோட்ட சமூகங்களை அண்டிய வீடு மற்றும் குறைந்த மாடி எண்ணிக்கையை கொண்ட வீடுகளை நிர்மாணித்தல்.
- தோட்ட சமூகங்களை அண்டிய வகையில் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி.
- தோட்ட சமூகத்தை அண்டிய சனசமூக சபை மற்றும் சனசமூக நிலையங்களை தாபித்தல்.
- தோட்ட சமூகத்தின் பிள்ளைகள் தொடர்பாக அடிப்படை வசதிகள் மற்றும் சுகாதார வசதிகளை உறுதிப்படுத்தல்.
- தோட்ட சமூகத்தின் வாழ்வாதார அபிவிருத்தி

1.8.3 தோட்ட வீடமைப்பு பிரிவு அபிவிருத்தி செயற்றிட்டங்களை அமுல்படுத்தும் முறைமை

அபிவிருத்தி செயற்றிட்டங்களை அமுல்படுத்தும் பணி பிரதானமாக தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி பிரிவின் விடயப் பரப்பின் கீழ் உள்ள நிறுவனங்களான பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பு, சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம், பெருந்தோட்ட பிராந்தியத்துக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அதற்கு மேலாக மாவட்ட / பிரதேச செயலாளர் அலுவலகங்கள் மற்றும் உள்ளூராட்சி சபைகளினால் மேற்கொள்ளப்படுகின்றது.

தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி பிரிவின் செயற்றிட்டங்களை அமுல்படுத்தும் முறைமை



02. ஆம் அத்தியாயம்

முன்னேற்றம் மற்றும் தொலை நோக்கு

விசேட வெற்றிகள், சவால்கள், எதிர்கால இலக்குகள்
2.1 தோட்ட வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்

வதிவிடங்கள் தொடர்பான குறிகாட்டிகளைக் கருதும் போது மிகவும் பின்னடைவுக்கு உள்ளாகியுள்ள இனக் குழுவாக பெருந்தோட்ட சமூகத்தை கருத முடியும். பெருந்தோட்டச் சமூகம் வாழ்கின்ற வீடுகளில் அதிகமானவை வரிசை வீடுகளாக இருப்பதுடன் அந்த வீடுகள் ''லயன் அறைகள்'' ஆக அறிமுகம் செய்யப்படுகின்றது. இந்த வீடுகளில் வாழ்கின்ற பெருந்தோட்ட சமூகம் அதிகமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளன.

- மிகவும் பழைமை வாய்ந்த வீடுகள் என்பதால் பழுதடைந்து காணப்படல்.
- சூரிய ஒளி மற்றும் காற்றோட்டம் மிகக் குறைவாக காணப்படுதல்.
- அதிகமான சன நெரிசல்
- தனித்துவம் இன்மை
- உப குடும்பங்கள் உருவாகுவதாலும் அவர்களும் அதே வீட்டில் தங்குவதாலும் பலவித துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாதல்.
- பாதுகாப்பின்மை
- சமூக ஏற்பின்மை
- சுகாதார மற்றும் சிறுவர்கள் கல்வி கற்பதற்கு பொருத்தமான சூழல் காணப்படாமை
- பெருந்தோட்டத் துறையில் இது போன்ற வீட்டு வகைகள் 3 ஆகும்

I. தனி வீடுகள்

264 சதுர அடிகளைக் கொண்ட இந்த வீடு முன்பகுதி திண்ணை மற்றும் அறையொன்றை உள்ளடக்கியதாகும்.

II . இரட்டை வீடுகள்

முன்பகுதி திண்ணையுடன் கூடிய அறைத் தொடர்களைக் கொண்ட வீடாகும். ஒரு வீட்டிற்கு சதுர அடி 145 – 175 அளவில் உரித்தாகும். தொடராக 10 – 12 அறைகள் இருக்க முடியும் அத்தோடு இரண்டு வரிசைகளைக் கொண்டிருக்கும்.

II. தற்காலிக வீடுகள்

பெருந்தோட்டத் துறையில் படிப்படியாக குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதைத் தொடர்ந்து லயன் வீடுகள் போதியளவாக காணப்படாமையின் காரணமாக அந்த வீடுகளுக்கு அண்டிய வகையில் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. தகரங்கள் மற்றும் பொலித்தீனால் உருவாக்கப்பட்டுள்ள இந்த வீடுகள் மிகவும் குறைந்த வசதிகளைக் கொண்டிருக்கின்றன.

வதிவிடங்கள் தொடர்பில் பெருந்தோட்ட சமூகம் முகங்கொடுக்கின்ற இந்த கடினப்பாடுகளை தீர்த்து கௌரவத்துடன் வாழ்கின்ற உரிமையை பெருந்தோட்ட சமூகத்திற்கு வழங்கும் நோக்குடன் தோட்ட வீடமைப்பு திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது.

அதன் கீழ் காணி உறுதியுடன் கூடிய 07 பேர்ச் காணி உரிமையுடன் பாதுகாப்பான குடிநீர், மின்சாரம் மற்றும் பிரவேச வழிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய 550 சதுர

அடியுடன் இணைந்த மலசல கூடத்தையும் கொண்ட தனி வீடுகளை வழங்குதல் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கு மேலாக விலங்கு வேளாண்மை மற்றும் வீட்டு பயிர்ச்செய்கை மேற்கொள்ள கூடியவாறு 03 பேர்ச் காணி வழங்குவதற்கு 2021 ஜனவரி மாதம் அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. (அமைச்சரவை பத்திர இலக்கம் MUD&H/2021/CP/06 திகதி 2021.01.07)

பெருந்தோட்ட சமூகம் முதன் முதலாக வருகை தந்து 200 வருடங்கள் பூர்த்தியாவதை நினைவு கூறும் இந்த சந்தர்ப்பத்தில் தோட்டங்களில் நிரந்தரமாக குடியேறிய ஒவ்வொரு குடும்பத்திற்கும் காணி உறுதிகளை வழங்கும் பணியை நிறைவேற்றுவதற்காக கொள்கை வேலைத்திட்டம் நடைமுறைபடுத்தப்பட்டு வருகின்றது.

